*1973 ஆகஸ்ட் 4]*

### *Assistance to Zari Industry*

* 19. *Q.*—THIRU N. DENNIS : Wil the Hon. the Minister for Industries bt pleased to state the details of the assistance offered by the Government to the Zari Industry in this State?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மாநிலத்திலுள்ள சரிகைத் தொழிலுக்கு வேண்டிய சரிகைப்பட்டினை நியாய விலையில் தொடர்ந்து விநியோகம் செய்வதற்காக அரசு "தமிழ்நாடு சரிகைப்பட்டு நிறுவனம்" என்ற வரையறுக்கப்பட்ட பொது நிறுவனப் பிரிவு ஒன்றை அமைத்துள்ளது. இப்பிரிவு கூடிய விரைவிலேயே உற்பத்தியினைத் தொடங்கும்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, what has happened to the proposal to start a Zari industry in Kancheepuram, for, the proposal was made some five or six years ago are that is my recollection. What is the present position of it?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** 'Zari' என்றுதான் கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதைப்பற்றிதான் கேள்வி. அதுபற்றிதான் பதில்.

### சிறு தொழில்களுக்குத் தேவைப்படும் உருக்கு

* 20 **வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள சிறுதொழில்களுக்கு 1972-73 ஆண்டுக்குத் தேவைப்படும் உருக்கின் அளவு எவ்வளவு ?

(இ) அந்த அளவுக்கு உருக்கு கிடைக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) தமிழ்நாட்டில் உள்ள சிறுதொழில்களுக்கு 1972-73 ஆண்டுக்கு தேவைப்படும் உருக்கின் அளவு 2,50,000 மெட்ரிக் டன்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

(இ) இம்மாநிலத்திலுள்ள சிறுதொழில்களின் தேவையைப் பூர்த்தி செய்ய, அதிக அளவில் பங்கீடுகள் வழங்கவேண்டுமென, இந்திய அரசை இவ்வரசு வலியுறுத்தி வருகிறது.